# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 15வது கூட்டம் 18 - 04 - 2010 அன்று ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் 6:30 மணிக்கு பங்குத் தந்தையின் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது. அன்றைய தினம் திரு. ஜீவன், றொபின், சார்ள்ஸ் ஆகியோர் சமூகம் தரவில்லை. திரு. விஜயகுமார் அகஸ்ரின் அவர்களுக்குப் பதிலாக திரு. வெனாசியஸ் அவர்கள் சமூகம் தந்திருந்தார். கடந்தமாத கூட்ட அறிக்கை செயலாளரால் வாசிக்கப்பட்டது. கூட்ட அறிக்கையை திரு. வெனாசியஸ் அவர்கள் முன்மொழிய திரு. சூசைமாணிக்கம் அவர்கள் வழிமொழிந்தார்.

மேலும், தூயஆவியானவர் பெருநாளை முன்னிட்டு எமது பங்குமாணவர்கள் அன்றையதினம் உறுதிப்பூசுதல் ஆயத்தம் செய்யும் ஒழுங்குகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. தூய ஆவியாவரின் திருநாளை மூன்று நாட்களாக கொண்டாடுவதாகவும், புதுவாழ்வு சபை வழிபாடானது 12 மணி நள்ளிரவு வரை வைப்பது நல்லது என்றும், பீட அலங்காரங்கள் வழமைபோல புதுவாழ்வு உறுப்பினர்கள் ஆயத்தம் செய்வார்கள் என்றும் அதற்கான உதவிகளை உறுதிப்பூசுதல் பெறும் மாணவர்களின் பெற்றோர்கள் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் கலந்துரையாடப்பட்டது.

மற்றும் summer கால நிகழ்வுகளாக, மீட்பின் அன்னையின் பெருவிழா வழமைபோல் இடம்பெறும் என்றும், மடுமாதா பெருநாள் இம் முறை எவ்வாறு சிறப்பிக்கலாம் என்றும், திருயாத்திரைத்தலம் ஒன்று எங்கள் வசதிக்கேற்ப அமைந்தால் அங்கு சிறப்பிக்கலாம் அல்லது எமது ஆலயத்தில் செய்யலாம் என்றும் கலந்துரையாடப்பட்டது. விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஆண்டு எமது நாட்டின் சூழ்நிலை காரணமாக நடாத்த முடியவில்லை. இந்த வருடம் பிள்ளைகளை ஊக்குவிக்கும் முகமாக அதனை நிகழ்த்த வேண்டும் என்றும் இதனை ஆசிரியர்களுடன் கலந்து ஆலோசித்து செய்யலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மறைத்தளத்தினால் மேற்கொள்ளப்படும் ஆண்டுச் சுற்றுலா இந்த ஆண்டு இரண்டு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், ஒன்று மறைத்தளத்தினாலும், இன்னொன்று புதுவாழ்வு சபையினாலும் இதற்கான சரியான சிறப்பான இடங்களை தீர்மானித்து அதற்கான நிழ்ச்சி நிகழ்வுகளை ஒவ்வொரு பகுதியினரிடமும் ஒப்படைக்கப்பட்டு சிறப்பாக மேற்கொள்ளவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், மரியாயின் சேனையிலிருந்து திரு அல்பிரட் ஞானராஜா அவர்களுக்கு பதிலாக தேர்வு செய்யப்பட்ட திருமதி யேசுமலர் தைரியநாதன் அவர்களுக்கு பெயர் விபரங்கள் பதிவு செய்வதற்கான படிவத்தை பங்குத்தந்தை வழங்குவதாகவும், தொடர்ந்துவரும் பங்குச்சபை கூட்டத்துக்கு அவருக்கு அறிவித்தல் வழங்கும் படியும் பங்குத்தந்தை கூறினார். மேலும் இளைஞர்களில் கூடுதலானவர்களை பங்கு சபையில் இணைக்க வேண்டும் என்றும், அவர்களுடைய முயற்சியும், ஆதரவும் எதிர்காலத்தில் பங்கை வளர்ச்சியடையச் செய்யும் என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. எதிர்வரும் 25-04-2010 ஞாயிற்றுக்கிழமை City யால் கீழுள்ள மண்டபத்தில் கண்காட்சி இடம்பெற இருப்பதனால் பங்கு மாணவர்களுக்கான மறைக்கல்வி வகுப்பு ஆலயத்தில் 10:30 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் பங்குத்தந்தை தெரிவித்தார்.

**ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 18-04-2010**

எமது பங்கினால் எமது நாட்டுமக்களுக்கு உதவும் வகையில் பல ஆடை ஆபரணங்கள் எம்மவர்களால் கிடைக்கப் பெற்றவை நாட்டிற்கு அனுப்பிவைக்க முடியாமை காரணமாக வைப்பில் இருக்கின்றன. அவற்றை பெரியவர்களின் உதவிக்காக விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அந்த வகையில் எமது ஆலயத்தின் பின்புறமாக 09-05-2010 ஞாயிறு அன்று ஒரு **Sale** போடுவதாக கலந்துரையாடப்பட்டது. அத்தோடு எங்கள் பங்கு பெரியவர்கள் தங்கள் கைப்பட செய்த சில பொருட்களும் அவற்றில் விற்பனை செய்து செய்வார்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் உதவும் கரங்கள் சம்பந்தமாக **MP** யுடன் சந்தித்து அதற்கு உதவும் வகையில் அவர்களுக ˙குரிய நேரங்களைக் கேட்டு இதனைப் பற்றிக் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இறுதியில் திரு. நெல்சன் அவர்களின் இறுதிச்செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

| | |
|---|---|
| அருட். தந்தை அன்றூா தவராஜசிங்கம் | திரு.நெல்சன் ஆரோக்கியநாதன் |
| பங்குத்தந்தை | செயலாளா் (பங்குச்சபை) |
| மீட்பின் அன்னை மறைத்தளம் | மீட்பின் அன்னை மறைத்தளம் |